தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VII.—No. 12.] MADRAS:—SUNDAY MARCH 18, 288. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

மனிதனுக்கு அழிவில்லாத ஆன்மாஉண்டா?
சுசீலிகை விசீலிகை சம்வாதம்.
நாத்திகத்தின்பயன்.
வேசித்தன்மை.

மனிதனுக்கு அழிவில்லாத ஆன்மாஉண்டா!

(35 - வது பக்கத் தொடர்ச்சி.)

இதுவிஷயமாய், அடிக்கடி சம்பவிக்கிற சில சங்கதிகளையும் சற்று யோசித்துப் பார்ப்போம்—அதாவது, தலையின்பேரில் அடியும் காயமுமே. சடுதியிலே தலையின்பேரில ஒரு கோலால் அடிக்கப்பட்ட பலத்த அடியினாலே இரண்டொருமணிநேரமாவது அதிகமாகவாவது சுரணைதப்பிப்போகிறது. விழுந்து தலையில் பட்ட காயத்தினாலே சிலவாரங்கள்வரையிலாவது மாசங்கள்வரையிலாவது சுரணையற்றிருக்கலாம். மத்தியமகாசமுத்திரத்திலே கப்பற்சண்டையில் தலையிலே ஒரு குண்டுதாக்கிச் சுரணையற்றிருந்த ஒரு கப்பலாள சங்கதியையோசிப்போம். அவனை ஜிப்ரால்ட்டருக்குக் கொண்டுபோய், செய்த வைத்தியம் பலிக்காமல், சிலமாசங்களுக்குப் பின்பு, சுரணையற்றிருந்த அந்த ஸ்திதியிலேதானே அவனை இங்கிலாந்துக்குக்கொண்டுபோனார்கள். அவ்விடத்திலே பின்னுஞ் சிலமாசம்வரையில், சரீர அங்கதருமங்கள்மாத்திரம் நடந்துகொண்டிருக்க, அந்தச் சுரணைதப்பினநிலையிலேதானிருந்தான். அவன் பேசிக்கொண்டிருக்கையில் அவன் வாயிலிருந்து வந்த வாக்கியத்தில் பாதி முடியும்போது சுரணைக்குக் கேடு வந்ததுமுதல் இதுவரையில் ஒரு வருஷத்திற்குமேலாய்விட்டது. என்ன சிகிச்சை செய்தும் பலனில்லாமல், கடைசியில் தலையைப்பரிசோதித்துப்பார்க்கையில், மூளையை ஒரு துண்டு எலும்பு அழுத்திக்கொண்டிருப்பதையறிந்து, அதை எடுத்து விட்டவுடனே அவனுக்குச் சுரணைவந்தது. வந்தவுடனே, ஒருவருஷத்திற்குமுன்னிட்டே அவன் சொலல ஆரம்பித்தவாக்கியத்தில் அப்போது முடிந்தபாதிபோக மற்றவார்த்தைகளை இப்போது சொல்லினன்; அது சத்துருக்களின் கப்பல்களில் சிலவற்றைப் பிடிப்பதைப்பற்றித்தான். இடையில் காலங்கழிந்தது அவனுக்குத் தெரியாது. இடையில்விட்டுப்போன வாக்கியத்தை முடிக்குந் தொழிலையுடைய மூளை நரம்புகள் விட்டகுறையைக் கழிந்துபோன தீர்க்ககாலம்வரையிலே மறவாதிருந்ததாகக் காணுகின்றன. அப்படியாயின், சுரணையற்று ஒன்றுமில்லாதிருந்த அந்த ஒருவருஷகாலவரையிலே அந்தக் கப்பலாளினுடைய அழிவில்லாத ஆன்மா எங்கேயிருந்ததென்று நாம் கேட்கலாமே? அதைக்குறித்து அந்தக் கப்பலாளும் ஒன்றுஞ் சொல்லக்கூடியவனல்ல, அந்த ஆன்மாவும் தான் சடமற்ற சூட்சுமசரீரியாய்த்திரிந்துகொண்டிருந்ததைப்பற்றி யாதொன்றுஞ் சொல்லக்கூடியதல்ல. ஆன்மா யில்லாமற்போனதற்குக் காரணம் மூளையில் தெரியாமல் ஒரு துண்டு எலும்பு அழுத்திக்கொண்டிருந்ததுதான். இந்தச் சங்கதியை யோசிக்கும்போது, அந்தக் காயம் பின்னுங் கொஞ்சம் ஆழமாயிருந்து, அங்கக்கட்டுசத்தையும் (பிராணனையும்) அறிவுசத்தையும் (ஆன்மாவையும்) அழித்துப்போடுவதற்குப் போதுமானதாயிருக்குமாகில், அப்போது ஆன்மா தனது பூர்த்தியான அறிவுடனே விளங்கியிருக்கிறதென்று நாம நிச்சயமாய் வாதிக்கக்கூடுமா? அப்படி வாதிப்பது ஒரு சமமான பாதையின்பேரில் ஒரு குண்டை உருட்டிவிட்டால் அது கொஞ்சந்தூரம் ஓடுமென்றும், சமமான தளவரிசையின்பேரில் அதேவலுவுடனே உருட்டிவிட்டால் பின்னுங் கொஞ்சந்தூரம் அதிகமாய் ஓடுமென்றும், மழமழப்பான பனிக்கட்டிப் பாறையின்மேல் உருட்டிவிட்டால் பின்னும் அதிகதூரம் ஓடுமென்றும், திரண்ட கற்பாறையின்மேல் உருட்டிவிட்டால், அதிக தொலைதூரம் ஓடுமென்றும், சொல்லுவதற்குச் சமானமாயிருக்கிறது.

தலையிலுண்டான நானாவித காயங்களினால் வெளியான இவ்வித பரிசோதனைகளால் மூளையினது நிலைமைக்கும் அறிவினது நிலைமைக்கும் பிரியாச் சம்பந்தமிருக்கிறதென்றும், மனதும் ஆன்மாவும் சுத்தமாயற்றிருக்கும்போது, மூளைக்கு ஒருவித அங்கக்கட்டு ஜீவனிருக்கலாமென்றும், கடைசியாய், உணர்ச்சி, பாசம், எண்ணம், இஷ்டம், ஆனமா, அல்லது அறிவென்று சொல்லப்பட்டவை இரத்த நரம்பின் வழியாய்த் தடையின்றி சுகமான ரத்தம் பாய்வதினாலும், மூளையின் அறைகளினாலும் வெளியாகிப் பூர்த்தியாய் நிலைத்திருக்கின்றனவென்றும், அந்த அறைகளுக்கும் ரத்தவோட்டத்திற்கும் பங்கம் வந்தால், உணர்ச்சி முதலியவற்றிற்குப் பங்கம் வருமென்றும் நடுவுநிலைமையான யோசனுபுருஷரொவ்வொருவருக்கும் நன்கு விளங்கும். அப்படியாயின், மனிதனைச் சேர்ந்த ஒவ்வொரு அம்சமும் அழிந்துபோகிறதுதானென்பதற்கும், இடைவிடாது மாறுதலாகிய பிரபஞ்சதருமமென்று சொல்லப்பட்டதற்கு அவன் உட்பட்டிருக்கவேண்டியதுதானென்பதற்கும் யாதொரு சந்தேகமுமிராது.

ஆத்துமா அழிவில்லாததாயிருந்தால், அது வியாதிக்குட்படமாட்டாதென்று சுலபமாய் நினைக்கக்கூடியதே. ஏனெனில், வியாதியென்பதென்ன? அங்கக்கட்டு கலகலத்து க்ஷீணித்துப்போவதுதான். சீக்கிரத்திலாவது நாட்சென்றாவது சகல அங்கக்கட்டு சரீரங்களுக்கும் நேரிடுவதே; ஆத்துமா இதற்குத் தப்பித்துக்கொள்ளமாட்டாதென்று நாம் ருசுப்படுத்துவோமாகில், ஆத்துமாவும் ஒரு அங்கக்கட்டுசரீரமாகவாவது, அங்கக்கட்டு சம்பந்தமானதாகவாவதிருக்கிறதென்றும், அதினாலே அது அழிந்துபோகத்தக்கதுதானென்றும் நாம் முடிவுகட்டவேண்டியதா யிருக்கிறது. இவையெல்லாம் மிகவும் தெளிவாகக் காணுகின்றன; தேசத்திலேமனது சம்பந்தமான வியாதிகளுக்குச் சிகிச்சை செய்ய அநேக வயித்தியசாலைகளைப் பிரத்தியட்சமாய்ப் பார்த்தும், ஜனங்கள் தங்களுக்குள் நினைக்கும் சக்தியுள்ளபாகம் அழிவற்றதாயிருக்கிறதென்று இன்னும் நம்பியே வருகிறார்கள். இந்த விஷயத்தைக்குறித்து ஆராச்சி செயய அவர்களுக்குச் சக்தி யுண்டாவதற்கு முன்னமே அவ்விதமாய் நம்பும்படி கற்பிக்கப்பட்டார்கள்; இயற்கையாகவே அவர்களுக்குப் பரம்பரையாய் அவ்வித ஞானமுண்டாயிருக்கிறது, அதினாலே அந்த மதிமயக்கத்திற்கு அனுகூலமாய்ப் பேசுகிறார்கள்; கூட்டங்களிலே

அதிக பற்றுடனேகூடியிருப்பதும் வைராக்கியமும் துரபிமானமும் அவர்களை அந்த மதிமயக்கத்தில் அழுத்திவைக்க அனுகூலமாயிருக்கிறது ; அதனுடைய பலனானது அவர்களிலனேகர் அந்த நம்பிக்கையிலுள்ள அநேக ஆட்சேபங்களை அறியாதவர்களாகவாவது அசட்டை பண்ணுகிறவர்களாகவாவதிருப்பதுதான் ; ஆகலால் உள்ள சங்கதிகளை விளங்கச் செய்வது அத்தியாவசியகமாயிருக்கிறது.

(இன்னும்வரும்.)
R. R.

சுசீலிகை விசீலிகை சம்வாதம்.

சுசீலிகை—அம்மா ! இந்த பத்திரிகையை யான் வாசித்து வருகிறேன் நீ கேட்டுவருகிறாயா ?

விசீலிகை—அதென்னபத்திரிகையம்மா ?

சு—இது தத்துவவிவேசினியம்மா ?

வி—போயும்போயும் அதைத்தானா தாங்கள் வாசிக்கவேண்டும் ?

சு—ஏன் அம்மா ! அப்படிச்சொல்லுகின்றீர்கள் ?

வி—ஏனென்றுங் கேட்கவேண்டுமோ ? அதில் கடவுள், ஆனமா, சுவர்க்கம், நரகம், பாவம், புண்ணியம், இல்லையென்றும், அவைகளை யுண்டென்போரை மதியீனரென்றும் பித்தரென்றுங் கூறியிருக்கின்றதே.

சு—அம்மா நான் சொல்வதை அமரிக்கையாய்க் கேட்பீர்களென்று நம்புகின்றேன். நான் இப்பத்திரந்தொடங்கியநாள் தொடங்கி வாசித்துவருகின்றேன. இதுவரையிலும் இதில் தாங்கள் செப்பியவாறு கண்டிலேன். தாங்களிதை வாசித்திருந்தால் இவ்வாறு செப்புவதற்கிடமிராதே. தங்கள் மனதை யார் மயக்கினரோ அறிகிலேன்.

வி—ஆனால் அதில் கடவுள், ஆன்மா, சுவர்க்கம், நரகம், பாவம், புண்ணியம் உண்டென்றுதான் சொல்லியிருக்கின்றதோ ?

சு—கடவுள், ஆன்மா, சுவர்க்கம், நரகம், பாவம், புண்ணியம் வைதிகசாஸ்திரங்களில் கூறப்பட்டன. கூறப்பட்ட இவைகள் அறிவுக்குக் கோசரப்படாதனவா யிருக்கின்றபடியால் அவைகள் உள்பொருளென்றும் இல்பொருளென்றும் வெளிப்படுமாறு விசாரிக்கின்றது இப்பத்திரிகை.

வி—ஆகா ! இதென்ன விபரீதம் ! தொன்றுதொட்டு நம்முன்னோரால் நம்பிவரப்பட்ட விஷயங்களில் உண்டோ இல்லையோ வென்னும் விபரீத விசாரணையேனோ !

சு—அதேனம்மா விசாரணையேனென்கின்றாய் ! விசாரணையினாலன்றோ நம்முன்னோர் நம்பியதும் ? இல்லையேல் நாம் நம்புவது எங்ஙனங்கூடும் ? ஆகவே நமது நம்பிக்கைக்கு விசாரணை யதியாவசியகமன்றோ ?

வி—விஷயங்களை நன்குணர்வதற்கு விசாரணை வேண்டுமென்பது உங்கள் கருத்துபோலும். ஆனால் இப்பத்திரிகை விசாரணையினால் இதுவரையிலும் அறிந்த விஷயங்களென்னை ?

சு—அம்மா நான் சொல்வதை நன்றாய்க் கவனியுங்கள். இப்பிரபஞ்சம் எண்ணிறந்த விகற்ப சொரூபங்களாக விளங்கும் ஒரேவஸ்து. இதற்கு ஆதி அந்தங்கிடையாது. இதனைத் திருத்தத் திருத்தச் சீருஞ் செல்வமும் அதிகரிக்கும். இதனை விருத்தமென வெறுப்போர்க்கு கருப்பும்கலியும் கைகண்டபலனாகும். இத்தகைய பலவற்றையும் தத்துவவிவேசினி கற்றுணர்ந்து கற்றவர்க்கும் மற்றவர்க்கும் மெத்தவும் சாற்றுகின்றது.

வி—அம்மா இது நல்லவிஷயந்தான் ஆயினும் கடவுள், ஆன்மா சுவர்க்கம், நரகம்முதலியவிஷயங்களில் இதுவரையிலும் விவேசினியின் விசாரணையென்னை ?

சு—கடவுள் ஆன்மாமுதலிய விஷயங்கள் அகோசரப்பொருள்களாதலால் அவைகளுக்குரிய நூல்களை விசாரிக்க நேரிட்டது. நேரிடவே அந்நூல்களில் பொதிந்துள்ள விரோதங்களைக் கணக்கிட கணக்கிடங் கொடுக்கவில்லை.

வி—ஆனால நானும் அவ்விரோதங்களை அறிய விரும்புகிறேன் அம்மா !

சு—அம்மா உனக்கு வாசிக்கத்தெரியாதாதலால் நான் இப்பத்திரிகையை வாசிக்குந்தோறும் நீ கேட்டறிவாயாக.

வி—அப்படியே ஆகட்டுமம்மா !

சு—இதோ வாசிக்கிறேன் கேளம்மா !

"கடவுள், ஆன்மா, சுவர்க்கம், நரகம், புண்ணியம், பாவம், இவைகளைப்பற்றிச் சொல்லும் நூல்வேதமெனப்படும். இஃது சொல்லப்பட்டேனும் எழுதப்பட்டேனும் இருத்தல்வேண்டும். ஆகவே வேதம் நாவையும் கரங்களையும் உடைய மனிதகிர்த்தியமாகின்றது. கல்வியின் கரையைக் கண்டாரெனக் கழறுதற்குரிய கல்விவான்களாலும் அறிதற்கரிய கடவுளையும், ஆன்மாவையும், சுவர்க்கத்தையும், நரகத்தையும்பற்றிய நூலை அனுபவக்கியானம் மிகவுங் குறுகியுள்ள முற்காலத்தில் மனிதன் உண்மையனுபவத்தால் செய்தானென்பது விந்தையிலும் விந்தையாய்முடியும். ஆகவே கடவுள, ஆன்மா, சுவர்க்கம், நரகம், பாவம், புண்ணியம் ஆகிய விச்சொற்களை முற்காலத்தவர் உலகத்தை நீதிமார்க்கமாய் நிலைநிறுத்தமுடியாதவராய் பயத்தை யுண்டுபண்ணும்படி கற்பித்ததாக விளங்குகின்றதேயொழிய வேறொன்றும இம்மொழிகள் விளக்கில."

சுசீலிகை விசீலிகை சம்வாதம் வாசித்ததில் கடவுள், ஆன்மா, சுவர்க்கம், நரகம், பாவம், புண்ணியம், ஆகிய இச்சொற்களை முற்காலத்தவா உலகத்தை நீதிமார்க்கமாய் நிலைநிறுத்தமுடியாதவராய் பயதனை உண்டுபண்ணும்படி கறபித்ததாக விளங்குகின்றதேயொழிய வேறொன்றும் இம்மொழிகள் விளக்கில என்று எனதன்புள்ள சுசீலிகை அம்மாள் சொல்லியிருக்கின்றனர்.

சமாதான விண்ணப்பம்.—தர்க்க பூகோளககோளசாஸ்திர முதலானவைகளைக் கற்ற அன்புள்ள சகோதரியாகிய சுசீலிகை அம்மாளவர்களே! தங்கள்முக்கியகருத்து இப்பிரபஞ்சம் சுயாதினனாகிய சுவாமியாலல்லவென்றும் பூதங்களின் சக்தியால்எல்லாமுண்டாகிறதென்றுமல்லவா ? இதைக்குறித்து அடியாள் கருத்தை விநயமாய் விண்ணப்பஞ் செய்கிறேன். அதென்னவெனில் புருஷனில்லாமல் நாம் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளும்போது பிரம்மமில்லாமல் மற்ற பூதங்கள் சக்திகளைப் பெற்றுக்கொள்ளுமென்பதே. இதை தங்கள் முக்கிய ஆலோசனையிற் சீதூக்கிப்பார்க்க சித்த சுத்தியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றவிஷயங்களில் தங்கள் கருத்துக்கு அடியாள் கருத்து மாறுபடாது.

இங்ஙனம்
தங்களன்புள்ளசகோதரி
ஞானசுசீலிகை. B.

ஞானசுசீலிகையெனப் பெயர் வகித்துக்கொண்ட பிரம்மக்கியான விசீலிகைமாதே !

இப்பிரபஞ்சம் சுயாதீனனாகிய சுவாமியாலல்ல பூதங்களின் சக்தியால் எல்லாமுண்டாகிறதென்னும் எமது முக்கியகருத்தை ரத்துசெய்வான், தாங்கள் விநயத்துடன் செய்த விண்ணப்பம் புருஷனில்லாமல் நாம்பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளும்போது பிரம்மமில்லாமல் மற்ற பூதங்கள் சக்திகளைப் பெற்றுக்கொள்ளும் என்பதே: அதாவது புருஷனில்லாமல் நாம் பிள்ளைகள் பெறுவதில்லையாதலால் பிரமமம் இல்லாமல் மற்ற பூதங்கள் சக்திகளைப் பெறாவென்பதே. பூதக்கலப்பாகிய புருஷருடன் பூதசகலப்பாகிய நாம் சையோகம் பெறுவிடில் பூதக்கலப்பாகிய பிள்ளைகளைப் பெறாதிருத்தலும், பெறின் பெறுதலும் இயல்பே.

சுயாதீனமாகிய சுவாமி அல்லது பிரம்மத்துடன் பாராதிபூதங்கள் எவ்வாறு கலந்து பூதவியல்பாகிய சக்திகளைப் பெறக்கூடும் ? கூடுமேல் தங்களது பிரம்மக்கியானத்தால் அதனைவிளக்குவது தங்கள் கடனாகின்றது. அல்லையேல் தங்கள் பிரமக்கியான மயக்கத்தை தத்துவக்கியான வொளிகொண்டு அகற்றக்கடவீர்கள்.

இங்ஙனம்
சகோதரவாஞ்சையுள்ள
தத்துவக்கியான சுசீலிகை—D.

விசீலிகை—அன்புள்ள சுசீலிகை அம்மாளவர்களே ! தாங்கள் சுசீலிகையெனப் பெயர் வகித்துக்கொண்டதுபோல் நாமும் ஞானசுசீலிகையெனப் பெயர் வகித்துக்கொண்டோம் அப்பெயரை அனுசரித்து விஷயங்களின் சத்து அசத்து விளங்கச் செய்யவேண்டியது நம் இருவர் கடமையாயிருக்க 'விசீலிகை' மாதே யென்று எழுதிய காரணம் தெரியவில்லை; நம்இருவருடைய குணகுணங்களின் விஷயங்களை வாசித்தறியும் நம்மிற் சிறந்த பெண்கள் சிரோமணிமுதலானவர்களல்லவா மேற்கண்ட பெயர்களை அங்கிகரிக்கவும் அல்லது மாற்றவும் சுதந்திரமுள்ளவர்கள் ! அதுவரையில் தங்கள் மனம் சகிக்கவில்லையே இவ்வளவு அவசரப்படலாமா ? இதைத் தாங்களே ஆலோசிக்கவேண்டும்.

உ, பிரம்மமென்னும் பெருவெளியால் ஜீவர், பிரிதிவு, அப்பு, தேயு, வாயு என்கிற அணுக்கள் உண்டாகவும் சேரவும் பிரியவும் சக்திகளைப் பெற்றிருக்கின்றன. அவ்வாகாயமாகியபெருவெளியில்லாவிட்டால் சீவர்களும் பூதங்கள்நான்கும் எங்கே யுண்டாகும் எங்கே வாசஞ் செய்யும், எங்கே யழியும், ஆனதால் சுயாதீன சுவாமி என்னும் பிரம்மத்திலிருந்து மேற்கண்டவைகள் சக்திகளைப் பெற்றுக்கொள்ளுகிறதென்பது நமது சிற்றறிவுக்கு விளங்கியதாம்.

இங்ஙனம்,
தங்களன்புள்ளசகோதரி
ஞானசுசீலிகை. B.

சுசீலிகை—எமது பிரியமுள்ள ஞானசுசீலிகை யம்மாளவர்களே ! தங்களை யான் பிரமக்கியான விசீலிகையென்று அழைத்தமைக்குக் காரணம் இச்சம்வாதம் முன்னர் சுசீலிகைக்கும் விசீலிகைக்கும் நடந்ததாதலாலும் விசீலிகையின் பதிலாய் பிரமக்கியானத்தை எமக்குப்போதிக்க வாரம்பித்ததாதலாலுமேயொழிய தங்களையேனும் தங்கள் மதத்தையேனும் மதோன்மத்தமாய் இகழ்ந்து எம்மையும் எமது கொள்கையையும் புகழ்ந்

துகொள்வதற்கன்று. வெறுஞ்சொலலிலென்ன உண்டு! இகழ்ச்சியும் புகழ்ச்சியும் வாதமுடிவிலன்ரு விளங்கும்? ஆயினும் தங்களுக்கு ஞான சுசீலிகையெனும் பெயரே புகழ்ச்சியைத்தருவதாக வெமக்குத் தங்கள் முறையீட்டால் காணப்படுகின்றபடியால் தங்களை யப்பெயர்கொண்டழைப்பதில் தடையிராது. ஜீவரென்பதெவற்றை? அவை ரூபமுடையனவா? அல்லனவா? ரூபமுடையனவேல் ஏன் நம்மால் அறியப்படவில்லை? அருபமாயின், அவை யெவ்வாறு அருபமாகிய பிரம்மம் அல்லது வெளியினின்று ரூபமாகிய பிரிதிவு, அப்பு, தேயு வாயு என்கின்ற அணுக்களை யுண்டாக்கவும், சேர்க்கவும், பிரிக்கவும் தக்க சக்தியைப் பெறக்கூடும்? அருபமாகிய அல்லது ஆவ்வாகாயமாகிய வெளிக்கு பெரியவென்னும் அடை யெவ்வாறு பொருந்தும? பூதங்கள் உண்டாதல் அழிதல் எனருலென்னே! சொருபங்களையுடைய நான்கு பூதங்களும் வாசஞ் செய்வதற்கு அருப வெளியை யெங்ஙனம் ஆதாரமாகக்கொள்ளும்! ஆனதால், சுயாதீனசுவாமியென்னும் பிரம்மத்திலிருந்து மேற்கண்டவைகள் சக்திகளைப் பெற்றுக்கொள்ளுகின்றனவென்பதற்குக் கூறிய நியாயங்கள் தத்தம் தொழிலைச் செய்யாமையறிக. இனியேனும் தாங்கள் தங்கள் பிரம்மக்கியானத்தை தக்க நியாயத்தால் வெளியிடுவீர்களாக. தங்களாலவ்வாறு செய்யக்கூடாக்கால் தத்துவங்களை விசாரியுங்கள். சத்தியத்தை யறியுங்கள்.

இங்ஙனம்,

சகோதரவாஞ்சையுள்ள

தத்துவக்கியானசுசீலிகை. D.

நாத்திகத்தின் பயன்.

வெண்பா.

நன்மைக்கே நாடோறு நன்குழைக்கு நாத்திகரே
துன்மைக்கே தோன்றிய தூபடையர்-துன்மைக்கு
அஞ்ஞான மானிடர்க ளாளாவா ரஞ்ஞான்று
மெஞ்ஞான மின்னதென மேவு.

தத்கால நாத்திகருடைய கொள்கை கடவுளின்னதென அறியக்கூடவில்லையென்பதாயிருக்கச் சைவ வைணவர், இவர்கள் கடவுளில்லையென்று சொல்லுகிறவர்களென்று அவதூறுமொழியைப் பிரயோகிக்கிருர்கள். ஒரு வைணவர் இல்லையென்றமொழியின் பொருளை யறியாமல் ஊமைக் குளறுவாயன் உத்பாத பிண்டமென்னுமாபோல் தமது பாமரக்குழாமிடையில் வைக்கோலால் ஓராடவனைச் செய்துகொண்டு அவனைச் சின்னபின்னமாய்ச் சேதிக்கும் வீரதிராய் வீண் பகட்டுச் செய்துகொண்டிருக்கிருர். குண்டுசட்டியில் குதிரையோட்டவா ஒருவன் குதிரையேறக் கற்றுக்கொண்டது? பயிரங்கமானஇடத்தில பலரும் அறிய நடத்திருல் குதிரையின் இலட்சணமும் குதிரைமேலேறிச் செல்வோனுடைய இலட்சணமும் தெரியும். குண்டுசட்டியில் குதிரை யோட்டுகிறவன் வெளியில் வந்து ஒருவேளை யிடறிவிழுந்தால் பலரும் நகைக்கப்போகிருர்களெனறஞ்சியா மூலையிலிருப்பது? ஒருவேளை தாம் துணையாய்க்கொண்ட குதிரையே யுதைக்குமென்ரு அல்லது அஃதுபயிரங்கத்தில் நடவாக் குதிரையோ யாதொன்று மறியக்கூடவில்லை. கிறீஸ்தவரைப்போல் தமது கூட்டத்தில் சேர்க்க வலிந்து பலவத்காரஞ் செய்வது யாதுகாரணம். வெல்லத்திற்கு ஈக்களைப் பிடித்துவிடவேண்டுமோ? கோமயத்தைத் தின்னத்தான் அறிவுடைய மானிடனைப் பலவத்காரஞ் செய்யவேண்டும். உண்மையை யறிய ஆவலா யிருப்பவருக்கே தெரிந்தவர் தெரிவித்தல் தெள்ளறிவுக் கழகாகும். இல்லாவிடில் "இணரூழ்த்து நாரு மலரனையர் கற்ற துணரவிரித்துரையாதார்" என்பதை யொக்குமே. இல்லையென்று சொல்லுபவனே உண்டென ஒப்புக்கொள்ளுகிருனென்று ஓர் வைணவர் எழுதியதையாயினும் பார்க்கவில்லையோ, ஆனல் நாத்திகர் உண்டென்பதற்கும் இல்லையென்பதற்கும் யாதொருநியாயமில்லையா? நியாயமில்லாமல் உண்டென்றும்இல்லையென்று முரைப்பவன் சர்வ சண்டாளன். உண்டென்பதற்குமில்லையென்பதற்கும்அவரவரோநியாயஞ்சொல்லவேண்டும். அங்ஙனமன்றிவாய்புளித்ததோமாங்காய்புளித்ததோவெனறுஉண்டென்றுமில்லையென்றும்சொல்லுகிற உன்மத்தரையெதற்கொப்பிடுகிறது. ஐயோ! இவர்கள் அறிவிருந்தவழி அம்மம்ம கொடிது! நாத்திகர் கடவுள்என்னுஞ்சப்தத்திற்குரிய பொருள் விளங்காமையால் அத்தகைய கியானம் வேண்டியவராயிருக்கிருர்கள். அவர்கள் புத்திக்கு அவகாசப்படாத ஒன்றை யில்லையெனமாட்டார்கள். அச்சப்தார்த்தத்தின் பொருள் விளக்கியுள்ளோமென் றுரைப்போர் முரண்பட மொழிகிருர்கள. கடவுள் முச்கரணங்களுக்கு மெட்டாதவரென்றுரைக்கும் ஞானிகளே அவரெட்டியதாகப் பாடிப்பாடியமுது ஆராய்ச்சிக்கு இடந்தராவணணஞ் செய்துவிட்டனர். உண்மையாய் ஏறக்குறைய தத்துவ சாத்திரங்களைக் கற்றுணர்ந்து அவற்றின்வழி சென்று நடுநிலை கோடாது நடப்போரே வாஸ்துவ நாஸ்திக நாமத்திற்குரியவர்; ஏனையோர் மூலாம்பூசிய செம்பை யொப்பாவார். இவர்க்குரிய உடலே மெய்; ஏனையோருடலே பொய். இந்நன்மார்க்க நாத்திகரே சுத்தக்கியானிகளென்றும் சுவக்கியானிகளென்றும் அழைக்கத்தக்க பெருமை வாய்ந்தவர்; ஏனெனில் இவர்கள் எப்போதும் உண்மையை உணர்ந் துலகத்தாருடைய பொது நலத்தை வளர்க்கும் வயலாவார், ஏனையோரெல்லாம் அவற்றின் எதிர்மறைப் பேருக்குரியவராய் பொது நலத்தை நோக்காத பொருமை குடிகொண்ட அசத்தியராவார். உண்மையையுணரு மாராய்ச்சியின்மையாலல்லவா அஞ்ஞான மேலிட்டது, அஞ்ஞான மேலிட வறுமை வளர்நதது, வறுமை வளர தேசவளப்பங் குன்றியது. தேசவளப்பங் குறைய இந்துதேசப்பெண் கண்டவருக்குப் பெண்டாயினள். பேதமை யென்பது மாதர்க்கணிகலம் என்னுமாபோல் அவளால் பெறப்பட்ட ஆண்பிளளைகளும் பெண் பிளளைகளானர்கள. இதற்கெல்லாமாதி ஆராய்ச்சியு முயற்சியுமின்மையே. இனியாகிலும் நாமெல்லோரும் மத அபிமானத்தை யொழித்துச் சுவக்கியானிகளாய்ப் பிரகிருதியின் தத்துவமின்னதெனப் பரிசோதிப்போமாக. ஜீவனேடிருக்குங்காலத்திலும் மரணகாலத்திலும் ஆத்திகர் நரகவேதனையை யெண்ணி யெண்ணி மனம் புண்ணுகிருர்கள். ஆனல் நாத்திகர் திரிகரணங்களுக்கு மெட்டாக் கடவுளிடத்தில் எக்கரணங்களால் பக்தி செலுத்துகிறதென்றெண்ணிப் பிரதிவியே பெருமை வாய்ந்த பேரின்பவீடென்றுன்னி அப்பேரின்ப அமிருதத்தைப் பானம்பண்ணப் பலவகையான் முயற்சிகள் செய்து பிரகிருதியின் சீற்றத்தை யாற்றி சுகாரோக இன்பத்தை யனுபவிப்பார்கள். நாத்திகமானது நியாய வழியை யோசிக்கும் சுதந்தரத்தையும் அதை யிதராளுக்குப் போதிக்கும், பிரசங்கிக்கும் சுதந்தரத்தையுமுடையது. இங்ஙனஞ் செய்வோர்க்கு யாதொரு சரீர தண்டனையுங் கிடையாது. மனிதனல் ஆராய்ச்சி செய்யக்கூடாதது ஒனறுமில்லையெனவுங் கற்பிக்கும். மற்றவர் மகா இரகசியமென்றுரைக்கும் இருளை அறிவின் ஒளியால் அகற்றும். அனுபோகத்தை ஆதாரமாய்க்கொண்டு மானுஷீக இன்பத்தை மல்கப்பண்ணும். காணப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தியுடையதென்றும் ஊழிகாலத்தில் சூனியமாகுமென்றுஞ் சொல்லுவோர் சொல்லே அவகாசப்படவில்லையென்று முரைக்கும். தேவனியற்கையென்றுரைக்கு மாத்திகருக்கு அவரைப்பற்றி யொன்றுந்தெரியாது. ஆனல் பிரத்தியட்சத்தில் பிரபஞ்சம் இயற்கையாய்க் காணும் நாத்திகருக்கு அதைப்பற்றிக் கிஞ்சித்துத் தெரியும். தெரியாததை தெரிந்ததாகச் சொல்லுகிறவனுண்மையாளனே அல்லது தெரிந்ததைத் தெரிந்ததாகச் சொல்லுகிறவன் உண்மையாளனே? தெரியும் தெரியும் என்று பொய்பேசுகிறதைவிடத் தெரியாது என்று மெய்பேசுதல் உத்தமம். இதனல் அசத்தியத்தை யாதாரமாய்க் கொண்டவ ராத்திகரென்றும் சத்தியத்தைச் சார்பாய்க்கொண்டவர் நாத்திகரென்றும் வெளிப்பட்டது.

(இன்னும்வரும்.)

C. A.

வேசித்தன்மை.

ஒழுக்கமும் சரீரமும் கேடுறுவதற்குக் காரணமாயிருப்பவைகளை ஆராய்ச்சி செய்வது வைத்திய சாஸ்திரியின் கடமையாயிருக்கிறது; அனறியும், அவ்வொழுக்கக்கேடும் சரீரக்கேடும்காரணகாரியங்களிலும் பலன்களிலும் பிரிவுறது பிணைபூண்டிருக்கிறதென்கிற இந்த சிறந்த நியாயத்தைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யவேண்டியகடமை யுண்டாயிருக்கிறது. இந்துஸ்தானத்திலே இந்தவிஷயங்களை ஆராய்ச்சிசெய்வது வெகுகஷ்டமே; ஏனெனில், வெளிப்பட்ட ஸ்திரீகளைக்குறித்து இங்கிலாந்திலும் பிரான்சிலுமிருப்பதுபோல,நமக்குப் போலீஸ்திட்டங்களாவது பதிவு புஸ்தகமாவது ஒன்றுங்கிடையாது.

இந்தியாவிலே வேசித்தனம் மதச்சார்பினையுடையதாகவேயிருக்கிறது. தென் இந்தியாவிலே, தாசிகளென்று சொல்லப்பட்ட அநேக வேசிகள் ஒவ்வொரு தேவாலயத்தையும் சேர்ந்தவர்களாயிருக்கிருர்கள். திருஷ்டாந்தமாக, காஞ்சிபுரம், சிதம்பரம், மதுரை, ஸ்ரீரங்கம் இப்படிப்பட்ட திவ்வியஸ்தலங்களிலே தாசிகள் மிகுதி. தென் இந்தியாவிலே தாசியில்லாத கோயிலில்லை. தேவதைகளின் பவனிகாலங்களிலெல்லாம் தாசிகள் வெகு அலங்காரத்துடனே நாட்டியஞ் செய்துகொண்டு முன்னே வரவேண்டும். சாதாரணமாய் மதஸ்தனுகிய ஒவ்வொரு இந்துவும நாட்டியப்பெண்களாகிய இந்தத் தாசிக்கூட்டத்தின் ஏற்பாட்டை ஆதரித்துவருகிருன், அதவா அங்கிகரிததாவதிருக்கிருன், கடப்பை, கர்நூல், பல்லாரி, இந்த ஜில்லாக்களிலே ஜனங்கள் ஆபத்துக்காலங்களிலே ஏதோ ஒவ்வொரு தேவதைக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு, அந்தந்த தேவதையின் உபயோகத்திற்காக அந்தந்த குடும்பத்திலுள்ள பெண்களில் ஒவ்வொருத்தியை பிரத்தியேகமாய் விட்டுவைக்கிற வழக்கமுண்டு. அந்தப் பெண்ணை தேவதைக்கு தத்தஞ் செ

யும்போது மதசம்பந்தமான ஒரு சடங்கு நடத்தப்படுகிறது. இந்தப் பெண்களுக்கு 'பசிவிகள்' என்றுபெயர்; அவர்கள் மேற்படி ஜில்லாக்களிலே ஒவ்வொரு கிராமத்திலும் விஸ்தாரமாயிருக்கிறார்கள். அவர்கள் குடும்பங்களிலிருந்துகொண்டே வேசித்தனம் செய்துவருகிறார்கள். அந்தந்த தேவாலயத்தைச் சேர்ந்த குருக்கள்மார் அல்லது அர்ச்சகர்முதலிய பிராமணர்கள் இந்தப் பெண்களை முதல் சோபனத்திற்காக பணக்காரர்களுக்குப் பொருத்திவைத்து நல்லபேரம் தட்டுகிறார்கள். தேவாலயத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு பெண்ணுக்காக சில சமயங்களிலே அவர்கள் ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். மதசம்பந்தமான தேவதாசிகளென்கிற சாககிட்டுக்கொண்டு, இந்தியாவிலே வேசித்தனம் பிரபலமாய் நடந்துவருகிறது, அநேகவிட புருஷர்களும் ஸ்திரீகளும் வேசித்தொழிலும் அதனாலுண்டாகும் மேக வியாதியுமாகிய பலிபீடத்திலே பலியாகிறார்கள். மதமும் தேவதைகளுமென்கிற பெயரால் மேகவியாதிகள் இந்துதேசத்தாருடைய தேகத்தைக் கெடுத்து பாழ்செய்கின்றன. இங்கிலீஷ் துரைத்தனத்தாரும் இந்தத் தேவதாசிகளென்னும் ஏற்பாட்டை அங்கிகரித்திருக்கிறார்கள்.

இராஜாங்கத்து ஆடம்பரங்களும் இந்தத் தேவதாசிகளில்லாமல் நடப்பது அரிது, அவர்கள நாட்டியமாடிக்காட்டி இந்த இராஜ்ஜியங்களின் கவர்னர்களை உல்லாசப்படுத்துகிறார்கள். பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் அவர்கள் தென் இந்தியாவைப்பார்க்கவந்திருந்தபோது, நாட்டியப்பெண்களாகிய இந்தத் தேவதாசிகள் சூழ்ந்துவர ஆடம்பரத்துடனே நல்வரவு பெற்றனர். இந்தஸ்திரீகள் மற்றவர்களைப்போல லாக்கு ஆசுபத்திரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவர்களுமல்ல; இவர்கள் சரீர ஆரோக்கிய பரிசோதனையினின்றும் நிவர்த்திக்கப்பட்டிருக்கிறார்கள். செல்வந்தர்களாகிய இந்துக்கள் அவர்களை அங்கிகரிக்கிறார்கள், கல்விமான்களோ ஜாடையாயிருந்துவிடுகிறார்கள், ஆளுகிற வமிசத்தாராகிய இங்கிலீஷ்காரரோ அந்தப்பெண்களின் நாட்டியத்தினால் களிப்படைகிறார்கள்; உள்ளபடி, சமஸ்தானத்திலாவது அவரவருடைய கிரகத்திலாவது நாட்டியப் பெண்ணாகிய ஒரு வேசியாவதில்லாமல் ஆடம்பரமான காரியம் நடப்பதரிது. ஆகையால் இந்தியாவிலே வேசித்தனமானது மதத்தினாலும் துரைத்தனத்தினாலும் அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது. துரைத்தனத்தார் இந்த நாட்டியப்பெண்களாகிய வேசிகளில் சிலரை இராஜாங்கத்து நாட்டியப்பெண்களாக இன்னும் கெஜெட்டில் போடாதிருப்பது ஆச்சரியந்தான்; இனி யொருவேளை அப்படி செய்வார்கள்போலும். மகாராணி அவர்களுடைய ஜூபிலி மஹோற்சவத்திலும் பெரியமனுஷியாளுடைய சமுகத்திலே தாசிகளுடைய நாட்டியமும் நடந்தேறியது.

நல்லது, இந்துமத தருமசாஸ்திரமானது வேசித்தொழிலுக்குள்ள காரணங்களில் ஒன்றென்று நாம் சொல்லியிருக்கிறோம். தென்இந்தியாவிலே ஸ்திரீகளை வேசிகளாக்குவதற்கு வேறே என்னகாரணங்களிருக்கின்றனவென்று யோசிப்போம்.

கல்வி—தேவதாசிகளுக்குள்தவிர, நிர்ப்பாக்கியமான இந்து ஸ்திரீகளுக்கு உள்ளபடி கல்வி பூச்சியமென்று தெரியவந்திருக்கிறது. அவர்களில் முக்கால்பங்குபேர் தங்கள் பெயரைக்கூட எழுதத்தெரியாதவர்கள்.

வம்புப்பிறப்பு—இந்துமத தருமசாஸ்திரமானது ஸ்திரீகளுக்குப் புனர்விவாகம் கூடாதென்று தடுக்கிறபடியால் வேறே யாதொருதேசத்திலே விவாகத் தாய்தந்தையருக்குப் பிறந்த பெண்கள் வாழ்க்கைநிலைமையினாலும் சட்டதிட்டத்தினாலும் வேசிகளாகவேண்டியதிருப்பதைப்பார்க்கிலும் இத்தேசத்திலே வம்புப்பிறப்புகள் மிகுதி.

தென் இந்தியாவிலே வேசித்தனத்திற்குண்டான முக்கிய காரணங்கள் இன்னின்னவையென்று அடியில் கண்டெழுதுவாம்:—

1. மதம்.
2. சோம்பல்.
3. பிலுக்கு.
4. கெடுத்துவிடப்படுவது.
5. குடும்பத்தில் வெறுப்பும் சங்கட்டமும்.
6. தீர்க்கயாத்திரைபோவது அல்லது ஊரைவிட்டுவேறொரு ஊரில் தீர்க்ககாலம் தங்கியிருப்பது.
7. தாய்தந்தையர்களுடைய துர்நடத்தையும் மாதிரியும்.
8. ஸ்திரீகளுக்குப் புனர்விவாகத்தடை.
9. சிபாய்களில் அநேகர் விவாகஞ்செய்துகொண்டு, நாலு ஐந்து வருஷகாலம் தங்கள் மனைவிகளை இந்தியாவில் விட்டு. பர்மாவுக்கும், அந்தெமன் தீவுக்கும் சேவகத்தின் பேரில் போயிருப்பது. இந்த நிர்ப்பாக்கியமான சிபாய்கள் தங்கள் மனைவிகளைத் தங்களோடுகூட இட்டுக்கொண்டுபோகக்கூடாதென்று துரைத்தனத்தாரால் தடுக்கப்படுகிறார்கள்.
10. ஏழைமை,

1. மதமானது வேசித்தொழிலுக்கு ஒரு காரணமாயிருக்கிறதென்பதைக்குறித்து மேலே சொல்லியிருக்கிறோம்.

2. சோம்பல்—தாய்தந்தையரால் கைசோர விடப்பட்டும் யாதொரு வேலையு மில்லாமலுமிருக்கிற ஸ்திரீகள் பட்டினி கிடக்கவேண்டியதுதவிர வேறொன்றுமில்லையாதலால், சம்ரட்சண நிமித்தம் வேசித்தொழிலில சந்தோஷமாய்ப் பிரவேசிக்கிறார்கள்.

3. பிலுக்கு—இதுவும் சோம்பலுக்கு அனுசரணையாய் நேர்த்தியாக அலங்கரித்துக்கொள்ளவேணுமென்கிற ஆசையும் வேசித்தனத்திற்கு வேறொரு காரணமாயிருக்கிறது.

4. கெடுத்துவிடப்படுவது—மோசம்போன பேதைஸ்திரீகள் தங்களை கெடுத்தவர்களைத் தேடிக்கொண்டு பட்டணம்வந்து, ஜீவனத்திற்கு ஒன்றுமில்லாமையால், வேசித்தொழிலுக் குட்படவேண்டியவர்களாகிறார்கள். இந்த நாட்டுப்புறத்துப் பெண்களுடைய வரவைப்பார்த்துக்கொண்டு காத்திருக்கிற துஷ்டபடவாசகள் அநேகர் எப்போதுமுண்டு. நாட்டுப்புறத்தில் கெடுத்துவிடப்பட்ட அநேக ஸ்திரீகளும் தங்கள் வெட்கத்தை மறைக்கும்பொருட்டும், வேசித்தனம் செய்யலாமென்கிற பூர்த்தியான எண்ணத்தோடும் பட்டணம்வந்துசேருகிறார்கள்.

5. குடும்பத்தில் வெறுப்பும் சங்கட்டமு முண்டாவதினால் அநேகர் இந்தச் சண்டாள ஜீவனத்தில் பிரவேசிக்கிறார்கள். நாட்டுப்புறத்திலிருந்து வந்துவிட்ட ஸ்திரீகளை, இந்த நீச்சத்துவமான ஜீவனத்தில் நீங்கள் பிரவேசிப்பதற்குக் காரணமென்னவென்று கேட்கும்போது, அவர்கள் சொல்லும் சாதாரணமான சமாதானங்களிலே மாற்றுந்தாயகள், மாமிமார்கள், அல்லது கணவர்களுடைய கொடுமையும் ஒன்றாயிருக்கிறது.

6. தீர்க்கயாத்திரைபோவது அல்லது ஊரைவிட்டு வேறொரு ஊரில் தீர்க்ககாலம் தங்கியிருப்பது வேசித்தனத்திற்குரிய காரணங்களில் ஒன்றாயிருக்கிறது. யாத்திரைக்காரர்கள் போகிற திவ்வியக்ஷேத்திரங்களிலே படவாசகள் வாலிபஸ்திரீகளை வசப்படுத்தும்பொருட்டு ஆள்களை வைத்திருக்கிறார்கள். இவ்விதமாய், தஞ்சாவூர் ஜில்லாவிலே நாகூரில் மகமதியஸ்தலத்திற்குப்போகிற அநேகஸ்திரீகள் வேசித்தொழிலின்பொருட்டே ரங்கூனுக்கு கொண்டுபோய்விடப்படுகிறார்கள்.

7. தாய்தந்தையர்களுடைய துர்நடத்தையும் மாதிரியும் ஒழுக்கங் கெடுவதற்குத் தகுந்தகாரணமேயல்லாமல் வேறல்ல. பெண்டிழந்தவர்களாய், வைப்பாட்டிகளை வைத்துக்கொண்டு தாராளமாய் வாழுகிறவர்கள் தங்கள் பெண்களுக்கு கெட்ட மாதிரியைக்காட்டி தீயவழியில் செலுத்துகிறவர்களா யிருக்கிறார்கள். தாய்தந்தையரைவிட்டுப் பிரிவதும் இவ்வித தீங்கைத்தான் விளைக்கிறது.

8. ஸ்திரீகளுக்குப் புனர்விவாகத் தடையானது இந்தியாவிலே வேசித்தனத்திற்குரிய கோரமான காரணங்களில் ஒன்றுதான். நல்லபருவத்திலே இயற்கையான இச்சையை அடக்குவது கூடாமைதான, அதனா லுண்டாவது கள்ளப்புணர்ச்சிதான்.

9. குடும்பங்களை நிறுத்திவிட்டு, சிபாய்களை அன்னிய நாடுகளுக்கு அனுப்புவது, இந்தியாவிலே வேசித்தொழில் விர்த்தியாவதற்கு அனுகூலமான வேறொரு காரணமேயாம். இதுவிஷயம் துரைத்தனத்தாரால் யோசிக்கப்படத்தக்கதே.

10. ஏழைமையானது வேசித்தொழிலுக்குரிய சாதாரணமான காரணங்களி லொன்றாயிருக்கிறது. நாட்டுப்புறத்தில் கூலிவேலைசெய்கிற பெண்ணாள்களினுடைய சம்பாத்தியம் அன்றாடம் வயிற்றைக் கழுவுவதற்கே போதும் போதாமையாயிருக்கிறது, மழைபெய்யாவிட்டாலோ அவர்களுக்கு வேலையுங்கிடையாது, பட்டணத்திற்கு ஓடிப்போகவேண்டியவர்களாகயாவது பட்டினிகிடக்கவேண்டியவர்களாகவாவ திருக்கிறார்கள். கணவர்களால் கைசோரவிடப்பட்ட ஸ்திரீகள் தங்கள மக்களைக் காப்பாற்றும்பொருட்டும், பெண்களோ தங்கள் வயது சென்ற தாய்தந்தையரைக் காப்பாற்றும்பொருட்டும், வேசித்தொழிலில் பிரவேசித்திருப்பதை நாம் பலவிசை கண்டிருக்கிறோம்.

மேற்பூச்சாகப் பார்க்குமிடத்து, தற்காலத்தில் நாகரீகத்தினாலே வேசித்தனம் அதிகமா யிருக்கிறதென்று ஒருவன் சொல்ல நினைக்கலாம்; ஆனால் இந்தத் துர்க்குணமானது மத்திய சகாப்தங்களிலே மவுடீகத்தன்மையால் மிகவும் சாதாரணமாயிருந்ததென்று சரித்திரம் கூறுகிறது. நாகரீகமில்லாத நிலைமையிலிருக்கிற ஜனங்களோடு நாம் பழகுவதினாலும் வேசித்தனமானது மானிடக்கூட்டத்திற்கு உரித்தானதாயிருக்கிறதென்று நாம் முடிவுகட்டலாம்!

V. V. N.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras.